UNIVERSITY OF JAFFNA
LIBRARY
PERIODICAL DIVISION

The Morning Star
CACM Central Office
"Asia House"
Maruthanarmadam
Chunnakam
Sri Lanka.

# உதய தாரகை
## The Morning Star

A Christian Publication Established 1841
Vol. 173 - Jaffna - Tuesday 12th June 2012 . No.2

*Righteousness Exalteth A Nation. But Sin is a Reproach to any people.*

Subscribtion Rs.20/=
(postage Include)
Please send your News & Articles to
The Editor
The Morning Star,
"Asia House"
Maruthanarmadam, Chunnakam.
Email:
thecacmmorningstar@gmail.com

# தூயாவியர் நமக்கு கடவுளின் கொடை
## திருச்சபைத் தலைவரின் தூயாவியர் தினச்செய்தி



**"உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன். தந்தை அவரை உங்களுக்கு அருளுவார். அவரே உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியர். உலகம் அவரை ஏற்றுக்கொள்ள இயலாது. ஏனெனில் அது அவரைக் காண்பதுமில்லை அறிவதுமில்லை. நீங்கள் அவரை அறிந்திருக்கிறீர்கள். ஏனெனில் அவர் உங்களோடு தங்கியிருக்கிறார். உங்களுக்குள்ளும் இருக்கிறார்." – பரி.யோவான்:– 14:16–17.**

உலகில் பலரும் பல கொடைகளை இறைவனிடம் மிக விரும்பி வேண்டுகின்றனர். அவற்றிற்காக பல வேண்டுதல் வழி முறைகள் மூலம் வழிபாடுகளைக் கடைப் பிடிக் கின்றனர். இந்த வகையில் எம் வாழ் நாள் நிறைவாக, இவ்வுலகில் வாழ இறைவனிடமிருந்து மனிதனுக்கு வழங்கப்படும் மிக உயரிய அருட்கொடை தான் தூய ஆவியர்.

யோவான்:- 14:18ன் படி "நான் உங்களை திக்கற்றவர்களாக விடமாட்டேன். உங்களிடம் திரும்பி வருவேன்" என்ற நன்நம்பிக்கையை வழங்கியே ஆவியர் வழங்கப்படுவதை காண முடிகிறது.

திக்கற்றவர்கள் யார்? உலகின் அதிகாரங்களினால் புறந்தள்ளப்பட்டவர்கள், துன்புறுத்தல்களுக்கூடாக கொடும் வேதனைகளை அனுபவித்தவர்கள், தங்கள் சுய அடையாளத்தை இழந்து போன நெஞ்சங்களின் உந்து சக்தியாக, வழிபாட்டை நடாத்தும் உரிமை இழந்து ஒன்று கூடி இறைவனை தொழுது பற்றுறுதியை வெளிப்படுத்த முடியாத மக்களின் விடி வெள்ளியாக அருளப்பட்டவரே தூய ஆவி யாராவார். இருளில் வாழும் மக்கள் விடிவு பெற அருளப்பட்டவரே தூயாவியர்.

(8ம் பக்கம் தொடரும்)

# ஓய்வு நிலைக் குருமாரை பராமரிப்போம்

ஜூன் 03ல் எம் திருச்சபையின் ஊழியர் இளைப்பாற்று ஞாயிறை முன்னிட்டு சிறப்பு வழிபாடுகள் எல்லாப் பிராந்தியங்களிலும் நடைபெற்றது. இவ் ஊழியர் இளைப்பாற்று ஞாயிறை முன்னிட்டு திருச்சபைத் தலைவர் அருட்திரு.ஈனோக் பூ.புனிதராஜா வெளியிட்ட செய்திக் குறிப்பிலிருந்து.

"25 வயதும் அதற்கு மேலுமானோர் சந்திப்புக் கூடார வேலையின் பணிகளைச் செய்யச் செல்வார். 50 வயதுக்கு மேலானோர் வேலையில், பணிகளிலிருந்து விலகிக் கொள்வர். அதன் பின் பணிகள் ஏதும் கிடையாது. ஆனால் சந்திப்புக் கூடாரத்தில் தங்கள் சகோதரரின் பணிக்குத் துணை நிற்பர். தாங்களாக ஏதும் செய்யலாகாது. லேவியர் பணிகளை நீ இவ்வாறு ஒழுங்குபடுத்துவாய்". (எண்ணிக்கை:- 8:23-26)

ஊழியர் ஓய்வு பெறும் போது அவர்களைப் பராமரிக்க வேண்டியது திருச்சபையின் பணியாகும். அவர்கள் எங்களோடு இருக்கிறார்கள் என்பதற்கான அடையாளமாக இருப்பது தான் ஓய்வூதியக் கொடுப்பனவு.

இளைப்பாற்று நிதியென்பது நீண்ட காலப் பயணத்திட்டம். இப்பயணத்திட்டத்தில் சிறியோர் முதல் பெரியோர் வரை இணைந்து செயற்பட வேண்டும் என்பது எண்ணிக்கை நூல் 8:23-26 தருகின்ற செய்தியாகும்.

இன்று வளர்ந்து செல்லும் விலையேற்றம், பணவீக்கம் நிலைமைகளினால் சொற்ப ஓய்வூதியம் பெறுகின்ற இவர்களின் வாழ்வு நிலை பாதிப்புக்குள்ளாகாது இருக்க உங்கள் மேலான உதவி மிகவும் அவசியம், அவர்களை தங்கள் செபங்களில் தாங்கிக் கொள்ளுங்கள் என சபை மக்களுக்கு பகிரங்க வேண்டுகோளை விடுத்திருந்தார்.

# ஆண்களுக்கான விழிப்புணர்வு

கிராமங்கள் தோறும் பெண்கள் சுய உதவிக் குழுக்கள் திருச்சபைகளிலும் கிராமங்களிலும் இருப்பதுபோல் ஆண்கள் குழுக்களை அமைத்து ஆண்களுக்கான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும்படி திருமதி.வசந்தி இராஜரட்ணம் வன்னிக் குருமாருக்கு ஆலோசனை கூறினார். யுத்தத்தின் பின்னர் சமூகம் இன்னும் பல அடிமைத் தனத்திற்குள் சென்று கொண்டிருக்கிறது. கசிப்பு பழக்க வழக்கம், போதை பொருட்களுக்கு அடிமையாகுதல், கொலை, களவு, பாலியல் துன்புறுத்தல், பாலியல் கொடுமையென பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது.. இதனை தடுக்கா விட்டால் அல்லது விழிப்புணர்வு ஏற்படுத்தா விட்டால் எம் சமூகம் இந்நாட்டில் வாழ்ந்ததற்கான எச்சமே இலாது போய்விடும். இதனால் ஆண்கள் குழுக்களை அமைத்து விரைந்து செயற்படுங்கள் என்று ஆலோசனை வழங்கினார்.

# வன்னித் திருச்சபைகளின் மீள் கட்டுமானத்தின் புதிய நோக்கும், அணுகுமுறையும்.

30 வருட யுத்தத்தினால் சிதைந்து சின்னாபின்னமாகியுள்ள வன்னித் திருச்சபைகளின் மீள்கட்டுமானத்திற்கும், மலையகப் பகுதிகளில் புதிய திருச்சபைகளின் விரிவாக்கத்துக்காகவும் புதிதாக நியமனம் செய்யப்பட்டிருக்கும் அருட்கலாநிதி .செ.ஜெயநேசன் அவர்களும், திருமதி.வசந்தி இராஜரட்ணம், இலங்கை வேதாகமச் சங்கச் செயலாளர் திருமதி.லக்ஷனி பெர்ணான்டோ ஆகியோரும் 3 நாள் விஜயம் மேற்கொண்டு வன்னிப் பணிகளைப் பார்வையிட்டார்கள்.

இவர்கள் இங்கு தங்கியிருந்த நாட்களில் சபைகளின் செயற்குழுக்கள், தாய்மார் சங்கம், குருமார் ஒன்றியம் ஆகியோரை சந்தித்தார்கள். பிராந்தியத் தலைவர் அருட்திரு. டி.எஸ்.குகனேஸ்வரன் சந்திப்புகளுக்கான ஒழுங்குகளைச் செய்து கொடுத்தார். இச்சந்திப்பில் முல்லைத்தீவு மாவட்ட சபைகளான சுதந்திரபுரம், விசுவமடு சபைகளும் கிளிநொச்சி மாவட்ட சபைகளான கிளிநொச்சி. முறிகண்டி, பாரதிபுரம், முறிப்பு, கோணாவில், அக்கராயன்குளம் ஆகிய சபைகளின் செயற்குழுவினரை சந்தித்து அவர்களின் திருச்சபையின் எதிர்காலத்தை குறித்து கலந்துரையாடினர்.

தாய்மார் சங்கம் தம் பிள்ளைகளின் கல்வி, பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பல தேவைகள் சம்மந்தமாக கருத்துக்கள் கூறியதுடன் தமது வாழ்வாதார சிக்கல்களையும். தொழிலில்லா பிரச்சனைகளையும், செய்யும் தொழிலுக்கு போதிய ஊதியம் கிடைப்பதில்லை என்பது குறித்தும், இருப்பிட வசதியின்மை குறித்தும் கண்ணீர் மல்க தெரிவித்தார்கள். இக்கருத்துக்களை கேட்டறிந்த குழுவினர் வன்னித் திருச்சபைப் பணிகள் தான் எமக்கு உற்சாகம் கொடுப்பதனால் திருசபையின் செயற்குழுவுடன் இணைந்து, புதிய அணுகுமுறையோடும், புதிய நோக்கோடும் செயற்படுவோம் என தெரிவித்தார்கள்.

(6ம் பக்கம் தொடரும்)

# தேசிய ரீதியில் தெரிவு



கிளிநொச்சி CACM கிறிஸ்து அரசர் ஆலயத்தைச் சேர்ந்த திரு.திருமதி. நாகராசாவின் மகன் தனுஷன் தேசிய ரீதியில் 15 வயதுக்குட்பட்ட கிரிக்கட் அணிக்கு தெரிவு செய்யப்பட்டு கொழும்பு றோயல் கல்லூரியில் தனது பாடசாலை கல்வியை கற்று வருகின்றார். இவர் வன்னி மாவட்டத்தில் தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டவராவார். றோயல் கல்லூரிக்குப் போவதற்கு முன் அவர் கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் கல்வி கந்று தன் பாடசாலைக்கு பல விருதுகளை பெற்றுக் கொடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இம்மாணவனை வன்னி சமூகம் வாழ்த்தி நிற்கின்றது.

# உதய தாரகை

மே, யூன் மாதங்கள் குடும்பத்தின் குல தெய்வங்களான தாய், தந்தையர் தினங்களை காணும் மாதங்களாகும். முன்பு ஒரு காலத்தில் தாய், தந்தையரைக் குறித்து பல முதுமொழிகளை நம் முன்னோர் கூறி வைத்திருக்கின்றனர். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்", "தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை, தந்தை சொல் மிக்க மந்திரமுமில்லை" என அதில் பல உண்டு. சினிமாக் கவிஞர்கள் கூட "வானத்தில் இரண்டு தீபங்கள், சூரிய சந்திரனே, வாழ்க்கையில் இரண்டு தீபங்கள் நம் தாய் தந்தையரே" எனப் பாடுகின்றார்கள். அத்தோடு "கொண்டு வந்தால் தந்தை, கொண்டு வந்தால் என்ன வராவிட்டால் என்ன தாய்" என்ற பழையமொழி தந்தையின் கட்டுப்பாட்டையும் தாயின் அன்பையும் பாசத்தையும் சொல்லி நிற்கின்றது.

தாய் தந்தையரோடு கூட்டுக் குடும்பமாக வாழ்ந்த இனம் இன்று யுத்தத்தினாலே பல்லாயிரக்கணக்கான பிள்ளைகள் தாய் தந்தையரை இழந்து அனாதை என்ற அடைமொழிக்குள் வாழ்கின்றது. இவ் யுத்தத்தினால் குடும்பங்களை தலைமை தாங்கி நடாத்த வேண்டிய பிள்ளைகள் இறந்து போனதால், தாய் தந்தையர் முதியோர் இல்லங்களில் முடங்கிப் போயுள்ளனர். வெளிநாட்டுப் பயணங்கள் ஏற்பட்டபோது பல தாய் தந்தையர்கள் தம் உறவுகளை, சொந்த மண்ணை, சொந்த வீட்டை விட்டு, அப்பன் ஆச்சி நட்டு வளர்த்த மர நிழலில் வாழாமல் வெளி நாடுகளில் தொலைக்காட்சிக்கு முன்பாக வாடும் அபாயம், எம் தாய் தந்தையர் இங்கு இல்லாமையால் எம் நிலம், வீடு பறிபோகும் அபாயம், எம் பிள்ளைகளுக்கு நல்ல விழிப்புணர்வு இல்லாமல் சீரழியும் இளம் சமுகம்,

அது மாத்திரமல்ல நவீன கலாச்சாரத்தினால் தம் தாய் தந்தையரை அம்மா அப்பா என்னு சொல்லிக் கொள்ள வெட்கப்படும் நிலை. எம்மை இன்று இந்நிலைக்கு ஆளாக்கிய பெற்றோரை மறந்து மறுதலித்து வாழ்கிறோம். பல இடங்களில் தாய் தந்தையருக்கு துன்புறுத்தல்கள் நடைபெறுகின்றது. சீதனக் கொடுமைகளினால், சொத்துக்களை பாகம் பிரிப்பதனால் என துன்புறுத்தல்கள் நீண்டு செல்கின்றது.

உலகத்தின் கால நீரோட்டத்தில் நாமும் வாழ்வதற்கு முற்படுகின்றோம். அதனால் தாய் தந்தையரும் அனாதை என்ற பெயரோடு வாழ வழிசமைக்கின்றோம். எம் தாய் தந்தையருக்கு கோயில் கட்டி கும்பிடவேண்டிய சமூகம், குடும்பம் என்ற கோயிலையே இடிக்க முயலுகிறது. ஏன் இந்த அவல நிலை? இந் நிலையில் நாம் சிந்திக்காவிட்டால் அல்லது விழித்தெழாவிட்டால் அவலம் அதிகரிக்கும். பிள்ளைகளே சற்று சிந்தியுங்கள்!!! திருமறையின் போதனைகளைப் பாருங்கள்!!!

- உன் தந்தையையும் தாயையும் மதித்து நட (விடுதலைப் பயணம் :-20:12)
- தம் தந்தையையோ தம் தாயையோ சபிக்கிற எவனும் கொல்லப்படவேண்டும் (விடுதலைப் பயணம் :-21:17)
- பிள்ளாய் உன் தந்தை தந்த நற் பயிற்சியை கடைபிடி, உன் தாய் கற்பிப்பதை தள்ளி விடாதே (நீதி மொழிகள் :-1:8)
- ஞானமுள்ள மகன் தன் தந்தையை மகிழ்விப்பான், அறிவற்ற மகனோ தன் தாயை இகழ்வான். (நீதி மொழிகள் :- 15:20)
- தந்தையைக் கொடுமைப்படுத்தி தாயை துரத்திவிடும் மகன் வெட்கக்கேட்டையும் இழிவையும் வருவித்துக்கொள்வான் (நீதி மொழிகள் :-19:26)
- தம் தந்தையையோ தாயையோ அடிக்கிற எவரும் கொல்லப்பட வேண்டும் (விடுதலைப் பயணம் :- 21:15)
- தந்தையையும் தாயையும் சபிக்கிறவனின் விளக்கு காரிருள் வேளையில் அணைந்துபோகும். (நீதி மொழிகள் :-20:20)

ப.ச.ஜ

## பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

இம்மாதம் பிறந்த நாட்களைக் கொண்டாடும்
அனைத்து உறவுகளுக்கும்
உதய தாரகை
தன் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கின்றது.

## Church of the American Ceylon Mission
## The Morning Star

"Asia House"
Christian Theological Seminary
Maruthanarmadam
Chunnakam
Sri Lanka.

### வருடச் சந்தாதாரர் ஆகுதல்

கிறிஸ்துவுக்குள் அன்பான வாசகர்களே!

கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வருகின்ற மாதங்களில் இருந்து தங்கள் பத்திரிகையை தபால் மூலம் தவறாது பெற்றுக்கொள்ள வருடச் சந்தாதாரராக மாறுங்கள். இது எமக்கு கிரமமாக பத்திரிகையை வெளியிட பெரும் உற்சாகத்தைத் தரும் என நம்புகின்றோம்.

உள் நாட்டு வருடச் சந்தாவாக தபால் செலவு உட்பட ரூபா.300.00 உம், வெளி நாடுகளில் வசிப்போருக்காக தபால் செலவு உட்பட US$.20 உம் பெற்றுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் தங்கள் விளம்பரங்களை (மறுமைக்குள் பிரவேசித்தவர்களின் ஞாபகார்த்தம், பிறந்த நாள் வாழ்த்துக்கள், திருமண வாழ்த்துக்கள் போன்ற மற்றும் பல) இப் பத்திரிகையில் பிரசுரிக்க விரும்புவோர் சிறிய நன்கொடையை வழங்குவதன் மூலம் நிறைவேற்றிக் கொள்ளலாம். இத்த விளம்பர படிவத்தை வெட்டி தங்கள் குருவானவருக்கூடாக சந்தாக்களை அனுப்பி வைக்கவும்.

முழுப் பெயர் : ........................................

அனுப்ப வேண்டிய
விலாசம் : ........................................

........................................

........................................

வருடச் சந்தத் தொகை ரூபா ........................................

.கையொப்பம் ........................................

## யேசுவண்டை வாரும்.

குளிரின் கொடுமையோ
பசியின் எல்லையோ
ஆதரவு இல்லையோ
ஏன் இந்தக் கோலம்

யாருக்காக ஏக்கம்
மக்கள் கைவிட்டனரோ
துணையென யாருமில்லையோ
காத்திருப்பது யாருக்காக

இயேசுவின் அன்பில் என்றும்
துன்பமே மறையுமன்றோ
கவலையை விடுவீர்
இயேசுவையே ஏற்பீர்

உம் போன்ற மக்களை
எம் இயேசு
அணைத்திடுவார்
இன்பமே என்றும்
பெறுவீர்
இயேசுவண்டை இன்று
வாரும்.

திருமதி.L.N. செல்வகுமார்
ஏழாலை தெற்கு



போட்டி இல.5

## இந்த வாரம் கவிக்களம்

### போட்டி இல.6

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை எழுதி அனுப்புங்கள். தரமானவை பிரசுரிக்கப்படும். தரமான ஒரு கவிதைக்கு பரிசு வழங்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி
கவிக்களம்
உதய தாரகை
கிறிஸ்தவ இறையியல் கல்லூரி,
மருதனார்மடம்
சுன்னாகம்.

முடிவு திகதி 01-07-2012




## முதுமையின் பசுமை

வாழ்வின் பணி முடித்து வாசற் படியோரம்
வாஞ்சைகள் நிறைவு செய்து வீற்றிருக்கும் தாயே!
கனவுகள் நனவாகி, நினைவுகள் நிஜமாகி
கடவுளின் கருணை பெற்ற, கனியமுதத் தாயே!
கருவறை தன்னில் உயிரினைப் பேணி
உருவினில் உலகிற்கு உவந்தளித்த தாயே!
மாண்புடன் மழலைகள் வாழ்ந்திடும் நோக்கில்
பாங்குடன் பணி செய்த பாசத்தின் தாயே!

அழகு கொட்டும் குழந்தைச் சிரிப்பில்
களங்கமற்ற உன் வெள்ளை உள்ளம்
தரையினில் அமர்ந்து தனிமையின் உறவில்
நிரையாய்த் தோன்றும் தேனினிய சிந்தனைகள்!
இன்பம் தரும் மழலைகளை மடியினிலே அணைத்தமையும்
அன்புடனே அமுதூட்டி ஆனந்தம் அடைந்தமையும்
பள்ளிப் பருவத்தினிலே பறந்தோடும் பாலகரை
பரிவோடு பார்த்து நின்று பரவசம் கொண்டமையும்

கல்விச் சிறப்பினிலும் சீரபண்பின் வளர்ச்சியிலும்
கருத்தோடு அறிவுரைகள் கூறி வளர்த்தமையும்
கண் முன்னே காட்சி தந்து களிப்பாக்கி வைக்குதம்மா,
நிறைபேறு இன்றுனக்கு குறைவின்றிக் கிடைக்குதம்மா.
தாயாகி, தாய்மையின் சிகரமுமாய் திகழும் உன் முன்,
சேயாகி நான் நின்று, நன்றி பொங்கி வாழ்த்துகின்றேன்.

ஜெபமணி இயேசுசகாயம்.
நவாலி

# "நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை

(யோவான் 13:8)

-திரு. அ. தேவானந்-

என் அன்புக்கினிய வாலிபர்களே! உங்களை இக் கட்டுரையின் மூலம் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றதோடு என் தேவனை ஸ்தோத்தரிக்கின்றேன். இன்றைய உலகில் வாலிபர்கள் மிகவும் பெறுமதியானவர்கள்... நாட்டினதும், திருச்சபையினதும் முதுகெலும்பு என வர்ணிக்கப்படுபவர்கள்! இப்படிப்பட்ட வாலிபர்களையே உலகமும் பயன்படுத்த விரும்புகிறது. அனேக விளம்பரங்கள் வாலிபர்களை அடிப்படையாக வைத்து செயற்படுவதுடன் அவர்களை தம் வசம் இழுத்து வைத்திருக்க விரும்புகின்றது. வாலிபர்களும் எல்லா இடங்களிலும் தமக்கு பங்கு உண்டு என்பதைக் காட்டவும் விரும்புகிறார்கள். அத்துடன் தாம் அதில் பிரகாசிக்க வேண்டும் என்றும் விரும்புகிறனர்.

இக்கட்டுரையை வாசிக்கும் உள்ளமே... நீ எந்த இடத்தில் பங்குள்ளவனாகவும், எந்த இடத்தில் பிரகாசிக்க வேண்டும் என்று அலைந்து திரிகின்றாய்.....

உன்னை உருவாக்கிய, உன்னை உயிரோடு வைத்திருக்கிற, உன்னை பாதுகாக்கின்ற, உன்னை போஷிக்கின்ற, இன்றும் உன்னோடு, உறவாட விரும்புகின்ற ஒருவரை நீ அறிந்திருக்கின்றாயா? நீ அவருடன் பங்கு கொள்ள விரும்பியிருக்கிறாயா? அவருக்குள் பிரகாசிக்க விரும்பியிருக்கின்றாயா?

அவர் யாரும் அல்ல; இந்த உலகத்தை உருவாக்கிய சிருஷ்டிகரான இயேசு கிறிஸ்துவே. அவர் உன்னைப் பார்த்து சொல்லுகின்றார் "நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை" ( யோவான் 13:8) நீ செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான் உன்னை கழுவுவதற்கு இடம் கொடு. அதாவது நீ பாவத்தோடு வாழ்வாயானால் உன்னை மன்னிக்க (கழுவி சுத்தப்படுத்த) அதிகாரமுள்ள இயேசுகிறிஸ்துவிடம் சென்று உன் பாவத்தை அறிக்கை இட்டு அவர் கொடுக்கும் இலவசமான மன்னிப்பை பெற்றுக்கொள். அந்த மன்னிப்பின் சந்தோசத்தை பெற்றுக்கொள்ளும் போது நீ இயேசுவின் பங்காளராக மாறிடுவாய்.

ஆண்டவரிடத்தில் பங்கு கொள்வது விலைமதிப்பற்றது; உலகப்பிரகாரமான ஆறுதல்களோ புறம்பான காரியங்களோ அதனுள் கலந்து விட முடியாது. எனவே நீ ஆண்டவரிடத்தில் பங்கு கொள்ள விரும்பினால் அதற்கு தடையாக இருக்கும் அத்தனையையும் கழுவுவதற்கு இடம் கொடுக்கவேண்டும்.

"என்னை பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான் (யோவா 8:12) என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொன்னார். இதனால் அவருடைய வாழ்க்கையையும் நல்லொழுக்கத்தையும் நாம் பின்பற்றி அவருக்கு ஒப்பாக மாறவேண்டும் என்பதை குறித்து எச்சரிக்கின்றார். இதை உணர்ந்த நாம் கழுவுவதற்கு இடம்கொடுத்து எமது இருதயத்தின் குருட்டுதன்மையிலிருந்து விடுதலை பெறுவோமானால் நாம் அவரிடத்தில் பங்குள்ளவர்களாக மாறுவோம்.

இயேசுநாதரை நேசிக்கிறது இன்னதென்றும் இயேசு நாதருக்காகத் தன்னைப் பகைப்பது இன்னதென்றும் அறிந்தவன் பாக்கியவான். எல்லாவற்றிற்கும் மேலாய் இயேசு நாதர் ஒருவரையே நேசிப்பது நம் கடமையாதலால், இந்த நேசருக்காக நாம் நேசிக்கும் மற்ற எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டும்.

சிருஷ்டிகளின் அன்பு மோசம் போக்குகிறதும் அடிக்கடி மாறுகிறதுமாயிருக்கிறது, இயேசு நாதரின் அன்போ உண்மையும் என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது. சிருஷ்டிகளின் மேல் சார்ந்து இருக்கிறவன் அவைகளோடு விழுவான், இயேசுநாதரை அணைத்துக்கொள்ளுகிறவனோ என்றைக்கும் உறுதியாய் நிற்பான். அவரை நேசித்து அவரையே உன் சினேகிதராக்கிக் கொள். முடிவுபரியந்தம் உன்னை அழிவுக்கு விலக்கிக் காப்பார்.

(8ம் பக்கம் தொடரும்)


## குருத்துவப் பயிற்சி

யாழ். மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியில் 2012ம் ஆண்டில் குருத்துவப் பயிற்சியில் இணைந்து கொள்ள விரும்புகின்ற சகோதர சகோதரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி க.பொ.த(சா.த)ல் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தியும், உயர் தரத்தில் சித்தியடைந்திருப்பதும் சிறப்பானது. திருமறை சார்ந்த ஏனைய பயிற்சிகள் பெற்றிருப்பின் வரவேற்கத்தக்கது. பயிற்சியை முடித்து வெளியேறுபவர்கள் திருச்சபையில் முழு நேர பணியாளர்களாக பணியாற்றும் வாய்ப்புக்கள் உண்டு. பயிற்சி பெற விரும்புகின்றவர்கள் தங்கள் குருவானவரின் சிபாரிசுடன்

**பதில் முதல்வர்,**
**கிறிஸ்தவ இறையியல் கல்லூரி,**
**மருதனார்மடம்,**
**சுன்னாகம்**

என்னும் முகவரியுடன் அல்லது

**077 322 3123**
**021 321 3210**

என்னும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.

பதில் முதல்வர்

## திருமண சேவை

அன்பின் தாரகை வாசகர்களே!

இன்று கிறிஸ்தவ குடும்பங்களின் பல பிள்ளைகளுக்கு ஏற்ற காலத்தில் பொருத்தமான துணைகளை தேடிக்கொள்வதில் பல சிரமங்கள் உள்ளன. இதனால் பல பிள்ளைகள் தம் விசுவாச வாழ்வை இழந்துள்ளனர். இதனை உணர்ந்து இப்பத்திரிகை மூலம் ஓர் பொருத்தமான துணையை தேடிக்கொடுக்கும் சேவையை செய்ய முயற்சிக்கின்றோம்.

ஆகவே தேவையில் உள்ளவர்களின் விபரங்களை உங்கள் போதகருக்கூடாக எமக்கு அனுப்பி வைக்கவும்.


# உதய தாரகை பத்திரிகையின் உன்னதமான வரலாறு

புதினப் பத்திரிகைகள் என்று நாம் அழைக்கும் பத்திரிகைகள் அனைத்துமே புதினங்களை மாத்திரம் அல்ல இருளில் இருக்கும் மக்களுக்கு அறிவு எனும் ஒளியை ஏற்றி வைக்கும் ஊடகங்கள் என்பதில் ஐயமில்லை. இன்றைய உலகில் ஏராளமான பத்திரிகைகள் போட்டிக்குப் போட்டி செய்திகளையும் பல துறைகளில் அறிவு சார்ந்த விடயங்களையும் மக்களுக்கு எடுத்து இயம்புகின்றன. இவைகளில் பல பக்க சார்புடையவை; பல அரசியல் அழுத்தங்களைக் கொண்டன. பல வியாபார நோக்கம் கொண்டவை.

இன்றைக்கு ஏறத்தாழ 175 ஆண்டுகளுக்கு முன்னர் உலகளாவிய அளவில் பத்திரிகைகள், அச்சு இயந்திரங்கள், துண்டுப் பிரசுரங்கள் போன்றவை மிக மிக அரிதாகவே காணப்பட்டன. இவைகளின் வரலாறே உன்னதமானது; பலர் அறியாதது; அனைவரும் கட்டாயம் அறிந்து கொள்ள வேண்டியது. இன்றைய விஞ்ஞான உலகில் தொடர்பாடல் கருவிகளும் நவீன ஊடக வளங்களும் நிறைந்த காலத்தில் வாழும் இந்த சந்ததி 175 ஆண்டுகளை முன்னோக்கிப் பார்க்கவும், குறிப்பாக அக்காலத்தில் அர்ப்பணிப்புடன் இத்துறைகளில் பணி செய்த தியாகிகளை நன்றியுடன் நினைவுகூருவதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும். அவ்வழியில் இன்று இக்கட்டுரையைத் தாங்கி வரும் "த மோர்னிங் ஸ்டார்"(The Morning Star) அல்லது உதய தாரகைப் பத்திரிகையே உலகில் வெளியிடப்பட்ட இரண்டாவது தமிழ்ப் பத்திரிகையாகவும் இலங்கையில் வெளியிடப்பட்ட முதலாவது தமிழ்ப் பத்திரிகையாகவும் இலங்கையில் வெளியிடப்பட்ட முதலாவது கிறிஸ்தவப் பத்திரிகையாகவும் இலங்கையில் வெளியிடப்பட்டு இன்றும் பிரசுரமாகும் இரண்டாவது ஆங்கிலப் பத்திரிகையாகவும் மிளிர்கின்றது என்றால் அது எமக்கு பெருமை தரும் விடயமே ஆகும்.

உதய தாரகைப் பத்திரிகை இலங்கையில் மானிப்பாய் எனுமிடத்தில் 1841ம் ஆண்டு ஜனவரி மாதம் 07ம் திகதி வெளியிடப்பட்டது. ஆனால் இப் பத்திரிகை வெளியிடப்பட்டதற்கான பின்னணிகளையும் அதற்கென கொடுக்கப்பட்ட விலையான மதிப்பற்ற தியாகங்களையும் பலரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. கி.பி.1500ம் ஆண்டுகளில் இங்கிலாந்து தேசத்திலே ஆங்கில திருச்சபையின் பாரம்பரிய ஆசாரங்களிலே திருப்தி கொள்ளாத ஒரு பக்தி நிறைந்த குழுமம் உருவாயிற்று. இவர்கள் ஆங்கிலத் திருச்சபைக்கு எதிராக குரல் கொடுத்தது மட்டுமன்றி 1582ம் ஆண்டு தங்கள் எதிர்ப்புகளுக்கான காரணங்களை முதல் முதலாக எழுத்து வடிவில் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டனர். தொடர்ச்சியான ஆங்கிலத் திருச்சபையின் எதிர்ப்புகளுக்குள்ளே வாழ விரும்பாத இக்குழுமம் கி.பி 1620 இல் புலம் பெயர்ந்து அமெரிக்காவின் "மசாட்ஸ் சூசட்ஸ்" எனும் மானிலத்தில் குடியேறினர். இவ்விடம் பின்னர் "நியூ இங்கிலாந்து" என்று அழைக்கப்பட்டது. இவ்வாறு குடியேறிய குழுமத்தினரை "புனித பிதாக்கள்" (Pilgrim Fathers) என அழைத்தனர்.

இவர்கள் தாம் குடியேறிய அமெரிக்காவின் "மசாட்ஸ் சூசட்ஸ்" மாநிலத்திலும் ஆங்கிலத் திருச்சபைக்கும் பேராயர் ஆளுகை முறைமைக்கும் எதிராக பல துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டனர். அச்சு இயந்திரங்களை அறிமுகப்படுத்தினர். வெறுமனே வாதப் பிரதி வாதங்களினாலோ, மேடைப் பேச்சுக்களினாலோ ஒரு சமுதாயத்தில் மாற்றங்களைக் கொண்டு வந்து விடமுடியாது என்றும் அச்சிலிட்டு வெளியிடப்படும் ஆவணங்கள் ஒரு சமூகத்தை மாற்றக்கூடியது என்றும் உறுதியாக நம்பினார்கள். இவ்வாறு இக் கொள்கைகளுடன் ஒரு பக்தி இயக்கம் அமெரிக்காவில் மிகவும் வேகமாக வளர்ந்து வந்தது.

இவ்வேளையில் 1783ம் ஆண்டு "கெனக்ரிக்கேற்" மாகாணத்திலுள்ள "றொறிங்போட்" நகரத்தில் வசித்த பக்தியுள்ள போதகர் குடும்பத்தில் பிறந்தார் சாமுவேல் மில்ஸ். இவருடைய தாயார் கொங்கிறிகேஷனல் சபையைச் சேர்ந்தவர். பக்தியுடன் வளர்க்கப்பட்ட இப்பிள்ளை ஒரு மிஷனரியாகச் செல்ல வேண்டும் என்பது தாயாரின் விருப்பம். பக்தி விருத்தி, நேர்மை, உண்மை, தொண்டு செய்யும் ஆர்வம், ஆழமான அர்ப்பணிப்பு எனும் சூழலில் வளர்ந்த சாமுவேல் மில்ஸின் வாழ்வில் 1806ம் ஆண்டு வில்லியம்ஸ் கல்லூரி வளாகத்தில் ஒரு அற்புதம் நிகழ்ந்தது. வழமை போன்று அவரும் அவருடைய 4 நண்பர்களும் வைக்கோட் பட்டடை அருகில் செபிக்கும் போது இடி மின்னல் மத்தியில் "பிற தேசத்துக்கு மீட்பின் செய்தி அறிவிக்கப்பட வேண்டும்" என்ற தரிசனத்தைக் கண்டார்.

- தொடரும் -

Rev.A.S.T

## The new perspective and approach in re building of Wanni Congregations

Rev.Dr.S. Jeyanesan, who is newly appointed as the Minister for expanding the new congregations in Wanni and Up Country, Mrs. Vasanthy Rajaratnam (Wife of Dr.Hentry Rajaratnam, the vice chairperson) and Mrs. Luxany Fernando (The General Secretary of Ceylon Bible Society) together paid a 3 day visit to Wanni congregations. During their stay, they met parish committees, Mothers unions, Pastors Gathering. Rev. D.S.Guganeswaran made all the arrangements for such meetings. The parish committees of Suthanthirapuram, Visvamadu, Akkarayankulam, Kilinochchi, Murikandy, Parathipuram, Murippu, Konavil and Akkarayankulam were met and discussed about future of the congregations.

Mothers shared about the issues of their children's education, public health, security, livelihood, housing issues and law wages for their labour. In response from the team, Wanni congregations are our inspiration, therefore, we will work with new approach.

## Awareness to Men



As the womens group organized every where, we have to start Mens club at parish and village level said by Mrs. Vasanthy Rajaratnam. While she further said Society has gone into many addictions like illegal liquor, robbery, rape, violence against women, murder and drugs etc. In order to stop this and bring awareness, make Mens clubs every where.

## Teachers Training for Sunday School Teachers

There was a teachers training for CACM Sunday School teachers at St.John's church, Batticaloa.

Association. Sunday School teachers from Jaffna, Wanni, Colombo and Baticaloa and directors





## Bible Study and Gathering:

Mrs. Vasanthy Rajaratnam conducted a Bible study on the Book of Revelation 22: 1-7 at a gathering of the pastors who minister in Wanni at CACM Christ the king Church, Kilinochchi. This programme was started with a prayer said by Rev. Jeyananthan. Rev. Dr. Jeyanesan said that in future, the temporary building of worshiping places will be developed.

## Certificate Awarding

Rev. J.Gnanapiragasam, Parish Preist of Poovarasankulam chaired a certificate awarding to the beneficiaries who followed sewing training at Poovararankulam church premises. Rev.Dr.S.Jeyanesan as the chief guest, Mrs. Vasanthy Rajaratnam and Mrs. Laxchany Fernando as special guests are graced the functions. The programme was started with the prayer of Rev.S.Kuganeswaran and 15 beneficiaries received certificates for their achievement in sewing. This programme is supported by Dr. Sivalingam.

## Full Moon Gathering

Everymonth, Sathiyapuram parish conducts Fullmoon gathering at the church premises. This programme covers education, spirituality and general knowledge issues.

## History of Fathers' Day




*It would be interesting to know how Father's Day came into practice and celebrated worldwide with an equal sincerity and respect as any other significant holidays. Here's a short history on the holiday, and meaning of the different colors of roses to be worn that Day. You may even refer the page to others to share the information by clicking on the link given below.*

*About 4,000 years ago a young boy named Elmusu wished his Babylonian father good health and a long life by carving a Father's Day message on a card made out of clay. No one knows what happened to Elmesu or his father, but the tradition of having a special day honoring fathers has continued through the years in countries across the world.*

*The Countries, where the Catholic Church were of significant influence on the culture of the society, Father's Day is celebrated on St. Joseph's Day (March 19). However, a more secular celebration which is not associated with any religion is followed in recent times to highlight the increased diversity among people from all over the globe coexisting together in one place.*

*Father's Day is celebrated popularly on 3rd Sunday in June in many parts of the world. The idea for creating a day for children to honor their fathers began in Spokane, Washington. A woman by the name of Sonora Smart Dodd thought of the idea for Father's Day while listening to a Mother's Day sermon in 1909. Having been raised by her father, Henry Jackson Smart, after her mother died, Sonora wanted her father to know how special he was to her. It was her father that made all the parental sacrifices and was, in the eyes of his daughter, a courageous, selfless, and loving man. Sonora's father was born in June, so she chose to hold the first Father's Day celebration in Spokane, Washington on the 19th of June, 1910.*

*In 1924 President Calvin Coolidge proclaimed the third Sunday in June as Father's Day. President Nixon, in 1972, established a permanent national observance of Father's Day to be held on the third Sunday of June. So Father's Day was born as a token of love and gratitude that a daughter cherishes for her beloved father. Roses are the Father's Day flowers: red to be worn for a living father and white if the father has died.*

## *Perhaps we'll never understand each other.....*

***Perhaps we'll never understand each other.***
***Loving doesn't mean that we agree.***
***If that were so, then I would say, why bother?***
***But there are things I know I'll never see.***
***I'm sure your heart knows what I don't yet know:***
***The pain of loving a reluctant son;***
***The anger, coming fast and building slow,***
***Of being helpless to control someone.***
***You want only that I grow up right,***
***But you know what right is, and I still don't.***
***I have to learn to wield my inner light,***
***And if I follow yours, well, then I won't.***
***I'm sorry for the anger in the air;***
***Though we fight, my love is always there.***

## *A Little Girl Needs Daddy*

***A little girl needs Daddy***
***For many, many things:***
***Like holding her high off the ground***
***Where the sunlight sings!***
***Like being the deep music***
***That tells her all is right***
***When she awakens frantic with***
***The terrors of the night.***

***Like being the great mountain***
***That rises in her heart***
***And shows her how she might get home***
***When all else falls apart.***

***Like giving her the love***
***That is her sea and air,***
***So diving deep or soaring high***
***She'll always find him there.***



## சிறுவர் பகுதி


# ஆ ! அய்யோ !

- ஜி. சச்சிதாநந்தம்

முன்னொரு காலத்தில் மிகப்பெரிய செல்வன் ஒருவன் இருந்தான். அவன் மிகவும் கஞ்சன். வேலையாட்களை வருத்தி வேலை வாங்குவான். ஆனால் சம்பளம் கொடுக்காமல் ஏமாற்றுவான். செல்வன் மாதத் தொடக்கத்தில் வேலையாளை அமர்த்துவான். பெரியத்தொகையை சம்பளமாகக் கொடுப்பதாக சொல்லுவான். வேலையாள் மகிழ்ச்சியாக வேலையில் சேருவான். மாத இறுதி வரை கடுமையாக உழைப்பான். மாதக் கடைசி நாளன்று செல்வன் வேலையாளை அழைத்து கொஞ்சம் பணம் கொடுப்பான். ''கடைக்குப் போய் ''ஆ'' ''அய்யோ'' வாங்கி வா ... வாங்கி வராவிட்டால் உனக்குச் சம்பளம் கிடைக்காது '' என்பான். பணியாள் கடைத்தெருவுக்குச் சென்று எல்லாக் கடைகளிலும் விசாரிப்பான். ''ஆ!'' ''அய்யோ!'' கிடைக்காமல் திரும்பி வருவான். செல்வன் அவனுக்குச் சம்பளம் கொடுக்காமல் வீட்டுக்கு அனுப்பிவிடுவான்.

எந்த வேலையாளும் அந்த கருமியிடம் சம்பளம் வாங்கியதே இல்லை. இந்தச் செய்தியை அறிந்த ஓர் அறிவாளி கருமியிடம் சென்றான். அவனிடம் வேலைக்கு அமர்ந்தான். நாட்கள் சென்றன. மாதத்தின் கடைசி நாள் வந்தது. கருமி பணியாளை அழைத்தான். சிறு தொகையைக் கொடுத்தான். ''கடைக்குப் போய் ''ஆ'' ''அய்யோ'' வாங்கி வா '' வாங்கி வராவிட்டால் உனக்குச் சம்பளம் கொடுக்கமாட்டேன்'' என்றான். ''சரி அய்யா! வாங்கி வருகிறேன்... ஆனால் அவை விலையேறி விட்டன... இன்னும் அதிகப் பணம் கொடுங்கள்'' என்றான் பணியாள்.

கருமிக்கு ஒன்றும் புரியவில்லை... அவற்றை எப்படி வாங்க முடியும் என்று நினைத்தான். அவன் கேட்ட தொகையைக் கொடுத்தான். அவன் பணத்தோடு திரும்பி வரப்போகிறான் என்ற நம்பிக்கையோடு இருந்தான் செல்வன்.



பணியாள் கடைத்தெருவுக்குப் போய் இரண்டு சாடிகள் வாங்கினான்... ஒரு சாடியில் ஒரு பூரானைப் போட்டான்... மற்றொன்றில் ஒரு தேளைப் போட்டுக்கொண்டு திரும்பி வந்தான்.

'' அய்யா! இதோ நீங்கள் கேட்ட ''ஆ'' 'அய்யோ'' என்று கொடுத்தான் பணியாள். கருமி வியப்புடன் ஒரு சாடியை வாங்கி அதனுள் கையை விட்டான். தேள் கொட்டியது. வலி பொறுக்க முடியாமல் ''ஆ'' என்று கத்தினான் அவன்.

''பார்த்தீர்களா அய்யா! இதுதான் ''ஆ'' ... இதைப்பாருங்கள் இதில் ''அய்யோ'' உள்ளது'' என்றான் வேலையாள். ''வேண்டாம் வேண்டாம்'' என்று கத்தினான் கருமி. வேலையாள் தன் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சியோடு வீடு திரும்பினான். கருமி மனம் திருந்தி நல்லவன் ஆனான்.

# நன்றி

ஒரு கட்டெறும்பு தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்தது.

மரத்திலிருந்து இதைப் பார்த்த புறா ஒன்று மரத்திலிருந்த இலை ஒன்றைப் பறித்து நீரில் வீசியது.

எறும்பும் தத்தித் தத்தி வந்து அந்த இலையின் மேல் ஏறிக் கொண்டது. அந்த இலை காற்றில் அசைந்து மெதுவாகக் கரைப்பக்கம் ஒதுங்கக் கரையில் ஏறி தப்பியது அந்த எறும்பு.

மற்றொரு நாள் ஒரு வேடன் அந்த புறாவைக் குறி வைப்பதைப் பார்த்தது அந்த எறும்பு.

ஆனால் புறாவோ இதை அறியாமல் வேறெங்கோ கவனமாக இருந்தது. அன்று தன்னைக் காப்பாற்றிய புறாவின் உயிரைக் காப்பாற்ற வேண்டியது தனது கடமையாக எண்ணியது எறும்பு.

விரைந்து சென்று வேடனின் காலில் நறுக்கென்று கடித்தது. கடியின் வலி தாங்க முடியாமல் கத்திய வேடனின் குறி தப்பியது. சத்தத்தைக் கேட்டுத் திரும்பிய புறா தனக்கேற்படவிருந்த ஆபத்தை அறிந்து அந்த இடத்தை விட்டுப் பறந்தது.

அன்று புறா நமக்கென்ன என்று அலட்சியமாயிருக்காமல் உதவி செய்ததால்தான் புறாவின் உயிர் தப்பியது. அந்த சிறிய உருவம் கொண்ட எறும்பும் நன்றி மறக்காமல் செயல்பட்டது.

எவருக்கும் எந்த நேரத்திலும் நம்மால் முடிந்த உதவியைச் செய்ய வேண்டும். அது போல் நமக்குச் செய்த நன்றியையும் எந்தக் காலத்திலும் மறக்கக் கூடாது.

# வானம் ஏன் நீல நிறமாக தெரிகின்றது?

ஏன்? எதற்கு ? என்ற கேள்விகள் எழும் போது தான் மனித அறிவும் மூட நம்பிக்கைகள் பலவற்றிலிருந்தும் விடுபடும் .பல அடிப்படை கேள்விகள் மனித மனங்களுக்குள் இருந்து வருவதே இல்லை. அவற்றில் ஒன்று தான் இது. ஏன் வானம் நீலம்?

சூரியனில் இருந்தோ அல்லது மின்குமிழில் இருந்தோ வரும் ஒளி வெள்ளை நிறமாக இருக்கும் ஆனால் பல நிறங்களை உள்ளடக்கியது. இதனை வானவில்லில் அவதானிக்கலாம் வாயுமண்டலத்தில் (ATMOSPHERE) கூடுதலான சதவிகிதம் (78 % நைற்றஜென்,21 % ஒக்சிஜென்) வாயுக்களும் மிகுதி நீராவியும் மாசுத்துணிக்கைகளும் உண்டு . அவற்றினூடே ஒளி பூமியை வந்தடைகிறது.

ஒளி அலைகள் வேறுபட்ட அலைநீளத்தை உடையவை. சிவப்பு நிறம் கூடிய அலை நீளம் கொண்டது. நீல நிறம் குறைந்த அலைநீளம் உடையது.

கூடிய அலைநீளம் உடைய ஒளி அலைகள் வந்தடைகின்றன. குறுகிய அலைநீளம் உடைய நீல நிற ஒளி வாயுத்துணிக்கைகளால் உறிஞ்சப்படுகிறது. உறிஞ்சிய துணிக்கைகள் அதை கதிர்க்கின்றன. அவை தெறிப்பு அடைந்து நீல நிறமாக வானம் தோன்றுகிறது.

ஒளி காற்று மண்டலத்தில் இடையூறில்லாமல் பயணம் செய்தாலும் காற்றிலுள்ள அணு மூலக் கூறுகள் நீர்த்துளிகள் பனிமூட்டம் போன்றவை ஒளியைச் சிதறடிக்கின்றன. சிதறிய ஒளி மேலும் மேலும் சிதறடிக்கப்படுகிறது. இவ்வாறு நடைபெறும் போது மிக அதிகத்துடிப்புடைய நீல நிறம் மிக அதிகமாக சிதறடிக்கப்படுகிறது. (சிவப்பு மிகக்குறைவாக சிதறுகிறது.)

நாம் பார்க்கும் போது அவ் ஒளி அலைகள் கண்ணை வந்தடைகின்றன. அதனாலேயே பகலில் வானம் நீல நிறமாக இருப்பது போல தோன்றுகிறது. வானம் என்பது வெறுமனே வாயுத்துணிக்கைகள், மாசுக்களால், மேலே கூறப்பட்ட ஒளியால் ஆனதே தவிர அப்படி ஒன்று இல்லை என்பதே உண்மை.

பௌதீக விதிப்படி ஒரு நிறத்தின் ஒளி அலைகளின் நீளம் அதிகமாக இருந்தால் அவை நம் பார்வைக்குக் கிடைக்காமலே போய்விடும்.

நீல நிறத்தின் ஒளி அலைகள் குறைவாக இருப்பதால் அது நம் கண்களுக்குள் மாட்டிக்கொள்கிறது.

வானம் நீல நிறமாக இருப்பதால் அதை பிரதிபலிக்கும் கடலும் நீல நிறமாகவே இருக்கிறது.

காலைமாலை சூரிய உதயம் அஸ்தமனம் போது மட்டும் அந்தப்பகுதி சிவப்பாக தெரியக்காரணம். சூரியக்கதிர்களில் உள்ள சிவப்பு நிறத்தின் ஒளியலைகளின் நீளம் அப்போ மட்டும் குறைவது தானாம்!

பூமியின் மேலுள்ள காற்று மண்டலம் தான் காரணம். சூரிய ஒளி அனைத்து வண்ணங்களையும் உள்ளடக்கியது. வானவில்லில் அது தன் தோகையை விரித்து ஏழு வர்ணங்களைக் காட்டுகிறது. அதனுள் மற்ற வர்ணங்களும் அடக்கம். அவை அனைத்தும் ஒளியே ஆயினும், வர்ண வேறுபாடுகளுக்கு காரணம் அந்த ஒளியின் அலைநீளம் மற்றும் துடிப்பு; வானவில்லின் வண்ணங்களில் நீல நிறம் மிக அதிகத் துடிப்புடனும் சிவப்பு மிகக் குறைந்த துடிப்புடனும் இருப்பவை.

நாம் 'பார்ப்பது' என்பது ஒளி நமது கண்ணில் வந்து படும்போது மட்டுமே. பார்க்கும் பொருட்கள் எல்லாமே அதில் பட்டு திரும்பும் ஒளி நமது கண்ணை வந்தடைவதால் தான் காற்று மண்டலத்தில் பலமாக சிதறடிக்கப்படும் நீல நிறமே மற்ற நிறங்களை விட பெருமளவில் நமது கண்ணில் வந்து விழுகிறது. ஆகவே தான் வானம் நீல நிறம்.


இரவில் நிலவின் ஒளி, நட்சத்திரங்களின் ஒளி ஆகியவை பலம் குறைந்த ஒளியாக இருப்பதால் அந்த சிதறல்கள் நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. நேராக வரும் ஒளியை மட்டுமே நம்மால் பார்க்க முடிகிறது.

## வேதாகமம்

எமது வாழ்க்கையின் வழிகாட்டி
இருள் அகற்றும் தீச்சுடர்
நன்நெறியில் நடத்திடும் நல் வழிகாட்டி
அறிவைக் கொடுத்திடும் அறிவொளி
அல்லல் உற்றவர்க்கு ஆதரவு நீ
வியாதி பட்டவர்க்கு மருத்துவர் நீ
அனாதைகளுக்கு தாயும் தகப்பனும் நீ
கிறிஸ்தவர்களின் முழுப் பலம் நீ
என் வாழ்வில் உறைவிடம் நீ

முத்துராசா ஜெயமாலினி
பரி.தோமா ஆலயம்
முறக்கொட்டான்சேனை
மட்டக்களப்பு

## நகைச்சுவை



நோயாளி: என்னை சீக்கிரம் காப்பாற்ற வேணுமென்று உங்களுக்கு இருக்கிற அக்கறை அந்த நர்சுக்கு இல்ல பாருங்கோ டாக்டர்!

டாக்டர்: எப்படிச் சொல்றீங்க?!

நோயாளி: பாருங்களேன்... எனக்கு ஏறிக்கொண்டிருக்கிற ரத்தம் சீக்கிரமா ஏறக்கூடாது என்று, 'சொட்டுச் சொட்டா' விழுகிற மாதிரி திருப்பி வச்சுட்டுப் போவுது அந்தப்பொண்ணு!

## பழமொழிகள்

1) நீ அனுபவி — அது தான் ஞானம். பிறரை அனுபவிக்கச் செய் — அது தான் தர்மம் — (பெர்சீய பழமெழி)
2) ஆட மாட்டாத நடன மாதிற்குக் கூடம் கோணலாம்
3) மாமியார் உடைத்தால் மண் கலம், மருமகள் உடைத்தால் பொன் கலம்.
4) முடி சான்ற மன்னரும் முடிவில் பிடி சாம்பலாவர்.
5) ஓடும் நாயைக் கண்டால் துரத்தும் நாய்க்கு இளக்காரம்.
6) கனவுகளை நேசியுங்கள். ஆனால்- நிஜத்தோடு நெருங்கி வாழுங்கள்.
7) வளமான காலத்தில் நண்பர்கள் நம்மை தெரிந்து கொள்கிறார்கள். வறுமை காலத்தில் நாம் நண்பர்களைத் தெரிந்துகொள்கிறோம்.
8) வேண்டாப் பொண்டாட்டி கை பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம்
9) ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்

## வாலிபர்/சிறுவர் பகுதிகள்

அன்பு வாலிபர்களே! சிறுவர்களே! வருகின்ற வெளியீடுகளில் வாலிபர்கள் மற்றும் சிறுவர்கள் பகுதிகள் இணைத்துக் கொள்ளப் படவிருப்பதால் தங்கள் ஆன்மீக சம்மந்தமான ஆக்கங்களை அனுப்பி வைத்தால் அதனை பிரசுரிப்போம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். ஆக்கங்கள் அனைத்தும் தங்களாலேயே ஆக்கப்பட்டது என்பதை தங்கள் குருவானவரினாலே சிபாரிசு செய்யப்பட்டிருக்க வேண்டும். உற்சாகமாக எழுதுங்கள். அதனால் தங்கள் திறமைகளை வெளிக்கொணருங்கள்.

# வாழ்க்கையின் வெற்றிக்கு 20 கோட்பாடுகள்

♦ எந்த விசயமாக இருந்தாலும் அல்லது எந்த பிரச்சனையாக இருந்தாலும் அதை அழகாக கையாளுங்கள

♦ அர்த்தமில்லாமலும், தேவையில்லாமலும் பின் விளைவுகளை அறியாமலும் பேசிக் கொண்டிருப்பதை விடுங்கள்.

♦ தானே பெரியவன், தானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.

♦ விட்டுக் கொடுங்கள்.

♦ சில நேரங்களில், சில சங்கடங்களை சகித்துத்தான் ஆக வேண்டும் என்பதை உணருங்கள்.

♦ நீங்கள் சொன்னதே சரி, செய்வதே சரி என்று கடைசி வரை வாதாடாதிர்கள்.

♦ குறுகிய மனப்பான்மையை விட்டொளியுங்கள்.

♦ உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கும், அங்கே கேட்டதை இங்கும் சொல்வதை விடுங்கள்.

♦ மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கவலைப்படதிர்கள்.

♦ அளவுக்கதிகமாய் தேவைக்கதிகமாய் ஆசைப்படதிர்கள்.

♦ எல்லோரிடத்திலும் எல்லா விசயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டா இல்லையோ, சொல்லி கொண்டிருக்காதிர்கள்.

♦ கேள்விபடுகிற எல்லா விசயங்களையும் அப்படியே நம்பி விடாதிர்கள்.

♦ உங்கள் கருத்துகளில் உடும்புபிடியை இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.

♦ மற்றவர்களுக்கு உரிய மரியாதையை காட்டவும், இனிய இதமான சொற்களை பயன்படுத்தவும் மறக்கதிர்கள்.

♦ புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்பு சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாமல் நடந்து கொள்ளாதிர்கள்.

♦ பேச்சிலும், நடத்தையிலும், திமிர்த் தனத்தயும் தேவையில்லாத மிடுக்கையும் . தவிர்த்து அடக்கத்தையும் பண்பாட்டையும் காட்டுங்கள்.

♦ அவ்வப்போது நண்பர்கள் உறவினார்கள் நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.

♦ பிணக்கு ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சை துவக்க முன்வாருங்கள்.

♦ தேவையான இடங்களில் நன்றியும், பாராட்டையும் சொல்ல மறவதிர்கள்.

## கேம்பிரிட்ச் மாணவர்களின் வருகை

கேம்பிரிட்ச் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் சிலர் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்து எம் திருச்சபையால் கரடியனாறு, மரப்பாலம், கித்துள், உறுகாமம் கோப்பாவெளி ஆகிய கிராம மக்களின் சுய உதவிக் குழுப் பயிற்சிகளையும் சேமிப்புப் புத்தகங்களை பேணுதல், வாழ்வாதார மேம்பாடு போன்ற செயற்பாடுகளை 20 நாட்கள் தங்கியிருந்து பார்வையிட்டனர். இக் கேம்பிரிட்ச் மாணவர்கள் பரி.யோவான் ஆண்கள் இல்ல மாணவர்களுக்கு Skype என்ற இணைய தொடர்பாடல் மூலம் ஆங்கில கல்வியை கற்பித்து வருகின்றனர்.

# தந்தையர் தினம்

தந்தையர்க்கு மரியாதையும், நன்றியும் செலுத்தும் விதமாக தந்தையர் தினம் ஆண்டுதோறும் ஜூன் 3வது ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகிறது.

இத்தினம் தற்போது பெரும்பாலான நாடுகளில் கொண்டாடப்படுகிறது. தந்தையர் தினம் கொண்டாட்டங்கள் மேலை நாட்டிலிருந்து வந்திருந்தாலும் கீழைத்தேச நாடுகளிலும், இன்று பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. குழந்தைகள் தங்களது தந்தைக்கு பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவிக்கலாம். பாசத்துக்கு எப்போதும் அன்னை தான் உதாரணம். ஆனால் தந்தைதான் ஒரு குழந்தைக்கு வழிகாட்டியாக இருக்கிறார். அன்னையிடம் அன்பை வாங்கலாம், தந்தையிடம் அறிவை வாங்கலாம்' என்ற பாடல் வரிகள் தாய், தந்தையரின் முக்கியத்துவத்தை விளக்குகின்றன. சிறு வயதிலேயே குழந்தைக்கு தந்தையை மதிக்க கற்றுத் தருவதே இதன் நோக்கம். தந்தையும் குழந்தைகளுக்கென நேரம் ஒதுக்கி அவர்களுக்கு நல்லொழுக்கங்களை கற்றுத்தர வேண்டும். ஒவ்வொரு தந்தையும் தனது குழந்தைக்கு ஒரு பொறுப்புள்ள தந்தையாக செயல்படவேண்டும். அதே நேரத்தில் தந்தையின் தியாகங்களை கருத்தில் கொண்டு, வயதான காலத்தில் குழந்தைகள் அவர்களை பேணிக்காக்க வேண்டும்.

தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை... தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' என நமது முன்னோர்கள் சொல்லிச் சென்றனர். அறிவியலும், விஞ்ஞானமும் அதிகம் அறிமுகமில்லாத அந்தக் காலத்தில், பிள்ளைகளும் அப்படியே வாழ்ந்தனர். இன்று ஒரு பிள்ளையை பேணி வளர்த்து, சான்றோனாக்க வேண்டுமென்றால், சுற்றியுள்ள சூழ்நிலைகளை எதிர்த்து போராட வேண்டியுள்ளது. மழலைப் பருவத்தில் தந்தையின் கைப்பிடித்து பள்ளி சென்று, பாடம் பயின்றோம். கல்லூரிப் பருவத்தில் தோழனாய் பழகினோம். இப்போது தந்தையின், தாயின் ஸ்தானத்தில் நாம் இருந்தாலும், தந்தை காட்டிய தோழமை, நாம் வளர குடும்ப பாரத்தின் சுமைதாங்கியாய் இருந்தது, இன்னும் நம் நெஞ்சில் பசுமையாக நிறைந்திருக்கும்.

**எப்போது தொடங்கியது:**

உலகிலேயே முதல் முறையாக 1910ம் ஆண்டு ஜூன் 19ம் தேதி வாஷிங்டனில் தந்தையர் தினம் கொண்டாடப்பட்டது. 1909ல் சொனாரா லூயிஸ் ஸ்மார்ட் டாட் என்ற இளம் பெண் தந்தையர் தினம் கொண்டாடும் யோசனையை முன்வைத்தார். 1909ம் ஆண்டு ஸ்போகேனில் உள்ள சர்ச்சில் அன்னையர் தினம் பற்றிக் குறிப்பிட்டதைக் கேட்ட அவர் அன்னையர் தினம் கொண்டாடும் போது தந்தையர் தினம் ஏன் கொண்டாடக் கூடாது என வலியுறுத்தினார். இவர் தனது தாயாரின் மறைவுக்கு பிறகு தந்தை வில்லியம் ஆறு குழந்தைகள் கொண்ட தனது குடும்பத்தை கடுமையான சிரமங்களுக்கிடையே பராமரிப்பதை கண்டார். இது தான் தந்தையர் தினம் கொண்டாட வேண்டும் என்ற எண்ணத்தை இவருக்கு தூண்டியது. இதன் படி 1910ம் ஆண்டு முதன்முதலில் தந்தையர் தினம் கொண்டாடப்பட்டது. பின்னர் 1966ம் ஆண்டு அமெரிக்க அதிபர் லிண்டன் ஜான்சன், தந்தையர் தினத்தை அங்கீகரித்து உத்தரவிட்டார். அதன்படி ஆண்டுதோறும் ஜூன் மாதம் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை தந்தையர் தினமாக கொண்டாடப்படும் என அவர் உத்தரவிட்டார். அதன் பின்னர் ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு 1972ம் ஆண்டு, ஒரு சட்டத்தின் மூலம் தந்தையர் தினத்தை தேசிய விடுமுறை தினமாக அதிபர் நிக்சன் அறிவித்தார்.

## ஆடுகளை மறந்த ஆயர்கள்!!



*உலர்ந்து கிடக்கும்*
*எலும்புகளுக்குப் பின்னால்*
*சிதைக்கப்பட்ட*
*மானுட சமுகத்தின்*
*சரித்திரத்தை*
*புரிந்துக்கொள்ளும் பார்வை*
*பரம்பொருளின்*
*அருள் அல்லவோ?*
*இறைவனின் பெயரால்*
*செபங்களை மட்டும்*
*உச்சரிப்பவர்கள் தாம்*
*இயேசு தோல் போர்த்திய*
*நிக்கதேமுக்கள்.*
*நாடு இல்லாதது பற்றி*
*கவலையை விடலாம்!*
*வீடு அபகரிக்கப்பட்டதற்கு*
*எம் விசுவாச குறைவோ?*
*பாடுகளை புறக்கணித்து*
*சிலுவையை உயர்த்துகிறோம்!*
*சலுகைகளை பெற்றிட*
*சாஸ்டாங்கம் செய்கிறோம்.*
*சமத்துவம் கேட்டு*
*சம நீதியில்*
*இறையருள் காண்பது*
*இயேசுவின் பணியென்பதை*
*புரிந்தும் பிதற்றுகின்றனர்*
*பாதை மாறிய மேய்பர்கள்.*

*புல்வெளியும், அமர்ந்த தண்ணீரும்*
*ஆக்கிரமிப்பின் எல்லையான பின்*
*பட்டினியும், புலம்பலும்*
*எம் தேகத்தில் நிரந்தரமாயிற்று!!*
*பிசாசுகளின் கட்டுகள் அல்ல*
*முள்ளுக்கம்பிகளின் வலைப்புதான்*
*இங்கு அதிகம்.*
*தொடருங்கள் பிராத்தனைகளை*
*இனியாவது நடைபெறட்டும்*
*அற்புதங்கள்.*

-ராறோ-

## ஆற்றுப்பணி

CACM திருச்சபையில் ஆற்றுப்பணியில் ஆர்வமுள்ள குருமாருக்கும், பொது நிலையினருக்குமான ஒரு வருட கால பயிற்சி பகுதி பகுதியாக நடைபெற்று வருகின்றது. இப்பயிற்சியின் 2ம் கட்ட செயலமர்வு அண்மையில் மட்/ஊறணி பரி.யோவான் ஆலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இப் பயிற்சி நெறியை இந்தியாவின் ஊட்டி, குன்னூர் என்ற இடத்தில் அமைந்துள்ள அன்ரூ மையத்தில் நடைபெற்றுவரும் இந்திய ஞாயிறு பாடசாலை ஐக்கியத்தின் இயக்குனர் கலாநிதி.அஜித் பிரசாதம் மற்றும் ஆற்றுப்படுத்தல் பகுதியின் துணை விரிவுரையாளர் திருமதி.சரஸ்வதி சியாமல் ஆகியோர் வழங்கி வருகின்றனர். இதில் 18 பேர் கலந்து பயனடைந்து வருகின்றனர்.

## அன்பளிப்பு

West Point திட்ட முகாமையாளர் திரு.விபுலானந்தமூர்த்தி அவர்கள் மட்/பரி.யோவான் ஆண்கள் இல்லக் கல்வி மேம்பாட்டுக்காகவும் நூலகம், பொழுதுபோக்கு, விளையாட்டு போன்றவற்றுக்காகவும் பல பெறுமதியான பொருட்களை அன்பளிப்பு செய்துள்ளார்.

## முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி

எம் திருச்சபையால் நடாத்தப்படும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கல்விக் கருத்தரங்குகளும் பயிற்சிகளும் மட்டக்களப்பு பரி.யோவான் ஆலய வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. இதில் ஒரு வருட பயிற்சியில் 66 ஆசிரியர்கள் பயிற்சி பெற்றனர். இதில் 12 ஆசிரியர்கள் முதன்மை ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்டு 2ம் கட்ட பயிற்சி நடைபெற்றன.

## தூயாவியர் திருவருகை விழா

ஏழாலை தெற்கு திருச்சபையில் 27.95.2012 அன்று வண.ஜீ.டீ.மைனசீலன் தலைமையில் திருச்சபை மக்கள் பெந்தேகொஸ்தே விழாவை மாலை 05:00 மணிக்கு கொண்டாடினர். நடைபெற்ற இன்னிசை வழிபாட்டில் ஏழாலை தெற்கு, ஏழாலை வடக்கு மற்றும் சத்தியபுரம் திருச்சபை பாடகர் குழுவினர் தூயாவியர் பற்றிய சிறப்புப் பாடல்களைப் பாடினர். மேற்படி திருச்சபைகளின் சபை மக்களும், போதகர்மாரும் கலந்து கொண்டதோடு திருச்சபைத் தலைவர் வண.ஈ.பூ.புனிதராஜா இறை செய்தியினை வழங்கினார், பிராந்தியத் தலைவர் வண.வ.ராஜ்குமார் அவர்கள் தூயாவியர் பற்றி ஒரு சிறப்பு வேதப்படிப்பை நடாத்தினார். செயலாளர் வண.ஏ.பி.தேவதாஸ் அவர்களும் கலந்து கொண்டார். பெந்தேகொஸ்தே அன்று மேல் வீட்டறையில் தூயாவியர் அக்கினி நாவுகளாக இறங்கிய காட்சி கொண்ட பதாகை(Banner) ஒன்றும் மேடையில் தொங்கவிடப்பட்டது.

## வன்னித் திருச்சபைகளின்..............

(1ம் பக்க தொடர்ச்சி)

இவர்களின் விஜயத்தின்போது பூவரசங்குளம் திருச்சபையினால் சபைக் குரு வண.ஜெ. ஞானப்பிரகாசம் தலைமையில் வைத்தியக் கலாநிதி சிவலிங்கம் அவர்கள் நிதி உதவியோடு முன்னெடுக்கப்பட்டு வரும் தையல் பயிற்சி நிலையப் பிள்ளைகளின் சான்றிதழ் வழங்கும் நிகழ்விலும் சிறப்பு அதிதிகளாக கலந்துகொண்ட இவர்கள் அங்கு பயிற்சியை நிறைவு செய்த 15 சகோதரிகளுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தனர்.

மேலும் கிளிநொச்சி CACM கிறிஸ்து அரசர் ஆலயத்தில் அருட்திரு.மா.ஜெயானந்தனின் வழிபாட்டைத் தொடர்ந்து நடைபெற்ற வன்னிப் பிராந்திய குருமார் ஒன்றுகூடல் நிகழ்விலும் கலந்துகொண்டிருந்தனர். திருமதி.வசந்தி இராஜரட்ணம் திருவெளிப்பாடு:- 22:1-7ல் திருமறைப் படிப்பை நடாத்தினார். இவ் ஒன்றுகூடல் நிகழ்வில் அருட்கலாநிதி. செ.ஜெயநேசன் கருத்துக்கூறும்போது தற்காலிகக் கொட்டகைகளாக இருந்து வழிபாடு செய்யும் ஆலயங்கள் மிக விரைவில் ஓரளவேனும் பக்திச் சூழல் உருவாகக் கூடிய முறையில் அமைய திருச்சபையின் செயற்குழுவுடன் கதைத்து நடவடிக்கை எடுக்கப்படும் என நம்பிக்கை தெரிவித்தார்.

வேதாகமச் சங்க செயலாளர் திருமதி.லக்ஷனி பெர்ணாண்டோ சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போது, இலங்கை வேதாகமச் சங்கத்தின் 200ம் ஆண்டையொட்டிய அனைத்து நிகழ்வுகளும் ஆண்டுவிழா தலைவி திருமதி.வசந்தி இராஜரட்ணம் தலைமையில் சிறப்பாக நடைபெற்று வருவதாகவும், நாடளாவிய ரீதியில் பல போட்டி நிகழ்வுகள் நடைபெற்று வருவதாகவும் குறிப்பிட்டார்.



ஏழாலை தெற்குத் திருச்சபையில் நடைபெற்ற தூயாவியர் வருகை விழாவின்போது கலந்து கொண்ட சபை மக்களையும் பாடல்களைப் பாடிய ஏழாலை வடக்கு, ஏழாலை தெற்கு, சத்தியபுரம் திருச்சபை பாடகர் குழுவினரையும் இறை செய்தி வழங்கிய திருச்சபைத் தலைவர், பிராந்தியத்தலைவர் மற்றும் ஜெபங்களில் வழிநடத்திய திருச்சபை செயலாளர், திரு.ரஜன் ஆகியோரை மேலே காணலாம்.



அண்மையில் கிழக்குப் பிராந்திய நற்செய்திப் பணிக் குழுவினரினால் அதன் கூட்டுனர் வண.யோ.நிவில் ரூபராஜ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இறாலோடை, பெரியநிலாவணை, முறக்கொட்டான்சேனை, ஜெயந்திபுரம் மற்றும் கித்துள் ஆகிய பகுதிகளில் நடாத்தப்பட்ட நற்செய்திக் கூட்டங்களில் சிறப்பு இறை செய்தியாளராக வண.எஸ்.ஜோன் லிங்கேஸ்வரன் அவர்கள் கலந்து கொண்டார்.



கிழக்கு மாகாணத்தில் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையினால் நடாத்தப்பட்ட இல்லங்களிலிருந்து கல்வி கற்று வெளியேறிய பழைய மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு அண்மையில் மட்டக்களப்பு பரி.யோவான் சமூகமண்டபத்தில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.



CACM திருச்சபையில் ஆற்றுப்பணியில் ஆர்வமுள்ள குருமாருக்கும், பொது நிலையினருக்குமான ஒரு வருட கால பயிற்சியின் 2ம் [illegible] அண்மையில் மட்/ஊறணி பரி.யோவான் ஆலய கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது.



CACM திருச்சபையால் நடாத்தப்படும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கல்விக் கருத்தரங்குகளும் பயிற்சிகளும் மட்டக்களப்பு பரி.யோவான் ஆலய வளாகத்தில் நடைபெற்றபோது.



பின்தங்கிய கிராமங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட பிள்ளைகளுக்கான தங்குமிட வசதிகளுடன் கூடிய 15 நாள் பயிற்சிப்பட்டறை அண்மையில் பரி.யோவான் மையத்தில் நடைபெற்றது. விளையாட்டு முற்றத்தில் பிள்ளைகள் நிற்பதையும் கணனிகளில் பயிற்சியளிக்கப்படுவதையும் இங்கு காணலாம்.

## ஒரு வார கால கிறிஸ்தியல் கருத்தரங்கு

மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் மாணவர்களுக்கும் குருமாருக்குமான கிறிஸ்தியல் இறையியல் கரத்தரங்கு ஒன்றை கிறிஸ்தவ இறையியல் கல்லூரி மண்டபத்தில் தென்னிந்தியத் திருச்சபை திருச்சி ஆதீனத்தின் குருவானவர் வண.கிறிஸ்டோபர் பாபு அலெக்சாண்டர் அவர்களினால் ஒரு வார காலம் நடாத்தப்பட்டது. தொடர்ச்சியாக இவ்வாறு பல விரிவுரையாளர்கள் இந்தியாவிலிருந்து வந்து இவ்வாறான இறையியல் மற்றும் பல துறைகளில் விரிவுரைகளை நிகழ்த்திச் செல்வது பெரும் பயனுள்ள இளம் சந்ததியை உருவாக்கும், ஆகையால் இத்திட்டம் வரவேற்கத்தக்க விடயம்.

## சத்தியபுரத்தில் போயாக் கூட்டம்.

சத்தியபுரம் திருச்சபையில் மாதந்தோறும் நடைபெற்று வரும் போயா தினக் கூட்டம் இக்கிராமத்தின் பிள்ளைகள், வாலிபர்கள், பெரியோர்களை ஆன்மீகத்திலும் அறிவிலும் வளர்கின்றது. இக் கூட்டத்திற்கு கிராம மக்கள் எல்லோரும் கலந்துகொள்வார்கள். இப்படியான பணிகள் சகல தரப்பினரையும் விழிப்புணர்வு ஊட்டுகின்றனவாக அமைகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## பயிற்சிப் பட்டறை

"பிள்ளைகளின் மூளை வளர்ச்சி 3 - 5 வயதில் நடைபெறுகிறது. இந்தக் காலத்தில் இவர்கள் மத்தியில் பணியாற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள் பெறுமதியானவர்கள். ஆனால் இன்னும் பலர் அதை புரிந்துகொள்ளவில்லை" என வன்னிப் பிராந்திய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கிய கிளி/ஆரம்ப பிள்ளைப்பருவ விருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.எஸ்.விந்தன் அவர்கள் தெரிவித்தார்.

இப் பயிற்சி பிராந்தியத் தலைவர் வண்.டி.எஸ்.குகனேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. வண.டி.எஸ்.மதியாபரணம் அவர்களின் இறை பிரார்த்தனையோடும் திட்ட இணைப்பாளர் திரு.த.யூதராஜாவின் வரவேற்புடனும் ஆரம்பமான இப் பட்டறையில் வன்னிப் பிராந்தியக் குருமார் அனைவரும் கலந்து கொண்டனர். திரு.எஸ்.விந்தன் பயிற்சியை சிறப்புற நடாத்தி ஆசிரியர்களின் அர்ப்பணிப்பையும் ஊக்கத்தையும் பாராட்டினார்.

## நான் உன்னைக்......

(3ம் பக்க தொடர்ச்சி)

ஜீவனிலும் சாவிலும் இயேசு நாதரோடு சஞ்சரித்து, அவருடைய பராமரிப்புக்கு உன்னை ஒப்புக்கொடு: மற்றெல்லாரும் உன்னைக் கைவிட்டாலும் உன்னைக் தாங்கக் கூடியவர் அவரே.

எல்லாவற்றிலும் இயேசு நாதரையே நீ தேடுவாயானால் கட்டாயம் நீ இயேசு நாதரை கண்டு பிடிப்பாய். உன்னையே நீ தேடுவாயானால் நீ உன்னைக் கண்டுபிடிப்பதும் நிச்சயம், ஆனால் அது உன் அழிவுக்கே ஏதுவாகும். இயேசு நாதரை தேடாத மனுஷன் தனக்கு தானே செய்து கொள்ளுகிற தீங்கு, உலகம் முழுவதும் அவனுடைய சத்துருக்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து அவனுக்குச் செய்யக்கூடிய தீங்கைவிட அதிகம் என்றே சொல்லலாம்.

என் அன்பு வாலிபர்களே! இன்றைய வாலிப வாழக்கை எப்படி சீரழிகின்றது என்பதை நான் சொல்லத்தேவையில்லை அதை தினம் தோறும் செய்தித்தாள்கள் கூறுகின்றன. நாமும் இயேசுவை தேடாமல் பாவத்தில் வாழ்வோமானால் எம்மை நாமே தொலைத்துக்கொண்டிருக்கின்றோம். அன்று பேதுருவைப்பார்த்து கூறிய இந்த இயேசு இன்றைக்கு எம்மைப்பார்த்து கூறுகின்றார்
"நான் உன்னைக் கழுவாவிட்டால்
என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை" ( யோவா 13:8) நாம் பங்குள்ளவர்களாக மாறுவோமா ... எம்மைக் கழுவ இடம் கொடுப்போமா...

ஒரு திருச்சபையின் பங்காளராக இருக்க விரும்பும் நாம் இயேசுவின் பங்காளராக இருக்கின்றோமா? என்பதை உறுதிப்படுத்துவோம். இயேசுவின் பங்காளனாக இல்லாதவன் திருச்சபையின் பங்காளனாக இருக்க தகுதியற்றவன்.

## ஆக்கங்கள்

ஆன்மீகத்தில் விழிப்புணர்வூட்டக்கூடிய கவிதைகள், கட்டுரைகள், படித்துச் சுவைத்தவை, சிந்தனைத் துளிகள் என்பன எதிர்பார்க்கப்படுகின்றது. தரமானவை இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். தங்கள் ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி

ஆசிரியர்
உதய தாரகை
கிறிஸ்தவ இறையியல் கல்லூரி
மருதனார்மடம்
சுன்னாகம்.

## CACM நிர்வாக உத்தியோகத்தர்கள் வரவேற்பு.

கடந்த 27.05.2012 அன்று காலை ஆராதனையைத் தொடர்ந்து காலை 09:30 மணிக்கு திருச்சபைத் தலைவர் வண.ஈனோக் பூ.புனிதராஜா, செயலாளர் வண.ஏ.பி. தேவதாஸ், பொருளாளர் திரு.வி.மித்திரா ரஞ்சன் ஆகியோருக்கு ஏழாலை தெற்கு திருச்சபையில் வரவேற்பளிக்கப்பட்டது.

## கிழக்கிலும், வன்னியிலும் பழைய மாணவர்களின் ஒன்றுகூடல்

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையால் நடாத்தப்பட்ட மற்றம் நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கிற இல்லங்களிலிருந்து வெளியேறிய கிழக்குப் பிராந்திய பழைய மாணவர்களுக்கான ஒன்றுகூடல் கடந்த 19ம் திகதி மே மாதம் 2012 சனிக்கிழமை அன்று முற்பகல் 09.00 மணிக்கு பரி.யோவான் சமூக மணடபத்திலும் வன்னிப் பிராந்திய பழைய மாணவர்களுக்கான ஒன்றுகூடல் கடந்த 20ம் திகதி மே மாதம் 2012 ஞாயிற்றுக்கிழமை அன்று பிற்பகல் 03.30 மணிக்கு கிளிநொச்சி CACM கிறிஸ்து அரசர் ஆலயத்திலும் நடைபெற்றன. நூற்றுக்கணக்கான பழைய மாணவர்கள் கலந்து கொண்டு தங்கள் உற்சாகத்தைக் காண்பித்தார்கள். தற்காலிக செயற்குழுக்களையும் அந்தந்த பிராந்தியங்களில் தெரிவு செய்துகொண்டனர்.

## தூய.தோமா பாலர்பாடசாலை விளையாட்டு நிகழ்வு

CACM திருச்சபையால் சாவகச்சேரியில் நடாத்தப்படும் தூய.தோமா பாலர் பாடசாலையின் 2012ம் ஆண்டுக்கான சிறுவர் விளையாட்டு நிகழ்வு அண்மையில் சாவகச்சேரி நகரசபை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு.இ. தேவசகாயம்பிள்ளை அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.சு.பாக்கியராஜா மற்றும் சாவகச்சேரி நகர் J/306, J/307 கிராம சேவையாளர் திரு.வி.சிவசரணநாதன் ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர்.

## பரீட்சையில் சித்தி

மட்டக்களப்பு பரியோவான் ஆண்கள் இல்லத்தில் 4 மாணவர்கள் கல்வி பொதுத் தராதர(சா.த) பரீட்சையில் அதி விசேட சித்தியைப் பெற்று மட்/இந்துக் கல்லூரியில் கலைப் பிரிவில் உயர் தரம் கற்று வரும் மாணவர்களான ஏ.வாசகன், ஏ.டிலக்ஷன், வி.ருபேஸ், எஸ்.பிரசாந் ஆகியோரின் பெற்றோர்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது..

## தூயாவியர் நமக்கு..........

(1ம் பக்க தொடர்ச்சி)

எப்போது தூய ஆவியர் தம் மக்களிடம் வருவார்? மேல் வீட்டு அறையில் நொந்து போனவர்களாய் பயத்துடன் ஒருமனப்பட்டு ஜெபத்துடன் காத்திருக்கும் போது அவர் நிச்சயம் வருவார். இதயங்களுள் நிறைவார். காயப்பட்ட நெஞ்சங்களை களிப்பால் நிறப்புவார். ஏதிர்பாராத வேளை வாழ்வில் குறுக்கிட்டு பிரித்தெடுக்கப்பட்ட வாழ்வுக்காக எமக்கு அறைகூவல் விடுப்பார். தாழ்மையின் வேறுபட்ட தெளிவான சிந்தையைத் தருவார்.

## கவிதைப் போட்டி

*அன்பு வாசகர்களே!*

*எதிர்வரும் யூலை மாதம் எமது அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை உதயமாகி 5 வருடங்களை கடக்கவிருக்கிறது. இதனையிட்டு எமது பத்திரிகை ஒரு கவிதைப்போட்டியினை நடாத்த திட்டமிட்டுள்ளது. உங்கள் கவிதைகளை வரைந்து எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வெற்றி பெறும் ஒரு கவிதைக்கு மாத்திரம் ரூபா.1000 பரிசாக வழங்கப்படும்.*

*அனுப்பவேண்டிய முகவரி:*
*"கவிதைப் போட்டி",*
*உதய தாரகை*
*கிறிஸ்தவ இறையியல் கல்லூரி,*
*மருதனார்மடம், சுன்னாகம்.*

## ஞாயிறு பாடசாலை ஆசிரியர் பயிற்சி

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபைகளின் அனைத்து ஞாயிறு பாடசாலை ஆசிரியர்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகள் அண்மையில் மட்டக்களப்பு புனித யோவான் ஆலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இக் கற்பித்தல் செயற்பாட்டினை இந்தியாவிலிருந்து வருகை தந்த வண.கிறிஸ்டோபர் பாபு அலெக்சாண்டர் மற்றும் இந்திய ஞாயிறு பாடசாலை ஐக்கியத்தின் பயிற்றுவிப்பாளர் திரு.அன்றூ ஆகியோரால் நடாத்தப்பட்டது. யாழ்ப்பாணம், வன்னி, கொழும்பு, மட்டக்களப்பு பிராந்திய சபைகளிலிருந்து ஆசிரியர்கள் வருகை தந்திருந்தனர். இவர்களுடன் பிராந்திய சமயக் கல்விக் குழு இயக்குனர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## புதிய ஊழியர்களுக்கான வாழ்த்து நிகழ்வு

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் புதிய ஊழியர்களாக பணிகளைப் பொறுப்பேற்கும் அருட்சகோதரர்கள் டேவிட் நிருஷிகன், பி.சுதாகரன். ஜெ.ஜெயகுமார், வசந்தன் ஆனந், கங்கா பிரசாத் ஆகியோருக்கான வாழ்த்து நிகழ்வு இணுவில், தெல்லிப்பழைத் திருச்சபைகளால் இணைந்து கடந்த 27-05-2012 அன்று நடாத்தப்பட்டது.

திருச்சபை மக்களால் மாலைகள் அணிவிக்கப்பட்டு அருட்சகோதரர்கள் வரவேற்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து சபைக் குரு வண.அன்ரனி சுதாகர், தெல்லிப்பழை திருச்சபையின் பொதுச் சபைப் பிரதிநிதி செல்வி.டெய்சி போல், இணுவில் திருச்சபையின் பொதுச் சபைப் பிரதிநிதி திரு.க.தேவதாசன் மற்றும் இறையியல் கல்லூரி மாணவர் தலைவர் சகோ.யூட் வினோதரன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர்.

## கல்வி ஊக்குவிப்பு செயலமர்வு

வன்னி, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட கிராமப்புற மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கவும், கல்விப் பொதுத் தராதர(சா.த) பரீட்சையில் அதிக சித்திகளைப் பெறவும் மாணவர்களுக்கான செயலமர்வு மட்டக்களப்பு ஜோன்ஸ் அக்கடமியில் 15 நாட்களாக மட்டக்களப்பில் பிரசித்திப் பெற்ற ஆசிரியர்களினால் கணிதம், தமிழ், விஞ்ஞானம், வரலாறு, ஆங்கிலம், கணணிக் கல்வி என்பன கற்பிக்கப்பட்டன. இச் செயற்பாட்டில் 30க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு தங்குமிட வசதி, உணவு, போக்குவரத்து, பாடசாலை உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன. இச் செயலமர்வினை கிழக்குப் பிராந்திய திட்ட இணைப்பாளர் திரு.பா.சசிகரன் மற்றும் திரு.ஜெ.ஞானசீலன் ஆகியோர் ஒழுங்கமைத்து நடாத்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

Holy Spirit comes when you are graceful in your life for others.

மற்றவருக்கான சிந்தையில் நிறைந்த எண்ணமுள்ளோர் வாழ்வில் பிறர் நலனுக்காய் தன்னலம் மறுக்கும் வாழ்வு வாழ்வோரின் வாழ்வில் மகிழ்வுடன் நிறைவார்.

எங்கு உண்மை உயிரோட்டம் பெறுகிறதோ அங்கு ஆவியர் ஆளுகை செய்கிறார். எனவே தான் கிறிஸ்து இவரை வாய்மையின் ஆவியர் என்றார். எங்கு தெளிவின்மை குழப்பம் உள்ளதோ அங்கு ஆவியர் வந்து தெளிவையும் ஒழுங்கையும் ஏற்படுத்துவார். எங்கு கொடும் வேதனையால் மக்கள் மடிந்து கொண்டிருக்கிறார்களோ அல்லல் படுகிறார்களோ ஆவியர் அங்கு ஆற்றுப்படுத்தி ஆறுதல் படுத்துவார். (பராக்கிளேட் - தேற்றரவாளர் - ஆற்றுப்படுத்துபவர் - Counselor) He is great Truth, knowledge, Teacher, Counselor and power of the powerless.

தூய ஆவியரால் நாம் ஆட்கொள்ளப்பட்டு, தாழ்மையுள்ளவர்களாய், நடமாடும் ஐந்தாம் நற்செய்தியாக, மற்றவர்களை மகிமைக்குள் நடத்தக் கூடியவர்களாக, மற்றவர்கள் எம் வாழ்வை வாசித்து மீட்படைய உம் கிருபையைத் தாரும் என்று வேண்டி வலுவிழந்த மக்களின் உந்து சக்தியான தூய ஆவியரை எமதாக்கி அருட் கொடை வரம் பெற்றவர்களாய் மற்றவர்களை இறையரசுக்காக வளப்படுத்தும் வாழ்வை வாழுவோம். வாரும் தூய ஆவியே, எம் திருச்சபைகளை உயிர்ப்பியும், ஒன்றுபடுத்தும். ஆமென்.

இப்பத்திரிகை அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் உதயதாரகை பத்திரிகை ஆசிரியரால் யாழ். வீதி ஆனைகோட்டை சந்தியில் அமைந்துள்ள ரூபன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு 12-06-2012 அன்று வெளியிடப்பட்டது.